IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

OS. No.118/2008 Date: 23.06.2025

PW1-ராஜு (எ) ராஜா

சாட்சி மீண்டும் முன்னிலையானதன் பேரில் 4 முதல் 11, 14, 15, 24ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

இறந்து போன 8ம் பிரதிவாதியின் வாரிசுகள் முருகேசன், ராஜம்மாள். முருகேசன் தனது பாக சொத்தை அவர் மகன் ஜீவானந்தம் பெயருக்கு தானசெட்டில்மெண்ட் எழுதி கொடுத்துவிட்டார் என்றால் எனக்கு தெரியாது. முருகேசனுக்கு அந்த சொத்து வாரிசு அடிப்படையில் வந்தது. 8ம் பிரதிவாதி முருகேசனுக்கு எழுதி கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரம் பற்றி எனக்கு தெரியாது. நான் தாவா சொத்திற்கான வில்லங்க சான்றிதழை வாங்கி பார்க்கவில்லை. 10ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தில் வாரிசு அடிப்படையில் தான் உரிமை ஏற்பட்டது. இறந்து போன பழனியப்பனுக்கு கணேசன், விஜயலட்சுமி, அம்சவேணி ஆகியோர்கள் வாரிசுகள். அம்சவேணி தன் பாக சொத்தை ஐக்குபந்தி கண்டு அக்கா விஜயலட்சுமிக்கு விடுதலை செய்து கொடுத்துவிட்டார் என்றால் எனக்கு தெரியாது.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி ஒத்திவைக்கப்படுகிறது)

ஒப்பம்/-ராஜு (எ) ராஜா

ஒப்பம்/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.